[1987 ஏப்ரல் 24

திண்டுக்கல்லிலுள்ள குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் அலுவலகம்.

50—வினா 10576—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் செயல்பட்டு வந்த குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் பெரியகுளத்திற்கு மாற்றப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 212-ன்கீழ் போக்குவரத்துத்துறை அமைச்சர் அறிக்கை.

அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத் துவக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் 212-வது விதியின் கீழ், அறிக்கை ஒன்றை பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் 1-4-1987-ல் துவக்கப்பட்டதனு [illegible].

பொதுமக்களுடைய கோரிக்கைகள் மீது விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டி 600-க்கும் மேற்பட்ட போக்குவரத்துப் பேருந்துகளைக்கொண்ட போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்க வேண்டும் என்றும் முடிவு எடுத்து, அதற்கேற்ப இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில், முதலில் பாண்டியன், சேரன், கட்டபொம்மன், சோழன் போன்ற

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1987 ஏப்ரல் 24] [திரு. சு. முத்துசாமி]

போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரித்து முறையே' மருதுபாண்டியர், ஜீவா, நேசமணி என்ற போக்குவரத்துக் கழகங்கள் ஏப்ரல் 1983-ஆம் ஆண்டும், மற்றும் தீரன் சின்ன மலை போக்குவரத்துக் கழகம் ஏப்ரல் 1985-ஆம் ஆண்டிலும் துவக்கப்பட்டன.

மேலும் பாண்டியன் போக்குவரத்துக் கழத்தை இரண்டா கப் பிரித்து, அண்ணா மாவட்டத்திற்கு என்று திண்டுக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு, 1–4–1986-லே ராணி மங்கம் மாள் போக்குவரத்துக் கழகம் துவக்கப்பட்டது. இப்போது அண்ணா போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தர்மபுரியை தலைமையிடமாகக் கொண்டு, அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் 1–4–1987 முதல் 332 பேருந்துகளைக் கொண்டு இயங்கி வருகிறது. அண்ணா போக்குவரத்துக் கழகம் 430 பேருந்துகளுடன் இயங்கி வருகிறது.

3. அறிவிப்பு

அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 22-4-1987-ஆம் தேதியன்று மாண்புமிகு நாஞ்சி லார் அவர்கள் உரையாற்றும்போது, நாஞ்சிலார் அவர் களுடைய விருப்பத்திற்கு இணங்க ஒரு குறிப்பிட்ட சொல்லை மட்டும் நீக்கினேன். மீதி நீக்கப்பட்ட பகுதிகளை நானே நீக்கிவிட்டேன் என்பதைச் சொல்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

4. கவன ஈர்ப்பு

(அ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நன்னிலம் விவசாயிகளுக்கு நிவாரணம்

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்தில் 1985-ஆம் ஆண்டில் எற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பன்னி ரண்டு வட்டங்களில் நன்னிலமும் ஒன்றாகும் என்று அரசு ஏற்றும் அப்பகுதியிலுள்ள குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் இல்லாமல் பல பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவது குறித்த'' அவரசப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.